காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டத்தை

# விருதுநகர் மாவட்டம் - வைப்பாறு வரை நீட்டித்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் வலியுறுத்தல்!



**சென்னை, மார்ச் 27- சட்டப்பேரவையில், நீர்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய விருதுநகர் தொகுதி கழக உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டத்தை விருதுநகர் மாவட்டம் - வைப்பாறு வரை நீட்டித்திட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-**

**நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு**
**என்ற வள்ளுவரின் கூற்றின்படி யும்**
**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயரக் குடி உயரும்,**
**குடி உயரக் கோல் உயரும்,**
**கோல் உயரக் கோன் உயர்வான்**

என்ற நமது ஔவை பிராட்டியார் கூறியதை நாம் நினைவுகூர்வோம்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நமக்கு வாக்களித்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சேர்த்து இரவு, பகலாக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்தில் 'அழுகின்ற குழந்தைதான் பால் குடிக்கும்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோன்று ஒரு தாய் தன் குழந்தை அழுத பின்புதான் பசியால் அழுவதாக நினைத்து, அந்தக் குழந்தைக்கு அமுது ஊட்டுவாள். ஆனால் என் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் ஒருமுறை காலை நேரம், பள்ளி ஆய்வுப் பணிக்காக செல்கின்றார். அங்கே ஏழை மாணவனின் முகங்களில் வாட்டம் கண்டு கவலையுற்று, ஏன் சோர்வாக உள்ளீர்கள் என வினவினார். எனது பெற்றோர்கள் காலையில் எழுந்தவுடன் அவர்கள் பணி நிமித்தமாக சென்று விட்டார்கள். ஆகையால் காலை உணவு அருந்தாமல் வந்துவிட்டேன் என்று மாணவன் கூறினார். மாணவன் பசியால் அழவில்லை. ஆனால், அவனது சோர்வை பார்த்தவுடன், நமது தலைவர் உடனே அதிகாரிகளை அழைத்து இப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தினம்தோறும், காலையில் வெவ்வேறு விதமாக உணவு வழங்குவதற்கான திட்டத்தினை தயார் செய்ய சொல்லி, தமிழக முதல்வர் காலை உணவுத் திட்டத்தினை தமிழகம் முழுவதும் செயல்படுத்தினார்கள். அந்த இடத்தில்தான் நமது முதல்வர் தாய் உள்ளம் கொண்ட முதல்வராக, தாயுமானவராக (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு பெறுகிறார்கள். இதனால், பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்தும், சோர்வுறும் படிக்கும் நிலை மாறி உள்ளது. இச்சிறப்புத் திட்டத்தினைத் தந்ததற்கும், எனக்கு, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கும், வாய்ப்பளித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

24 மணி நேரமும் தமிழகத்திற்காகவும், கழகத்திற்காகவும் மக்களின் நலனுக்காகவும் தமிழகம் முழுவதும் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு வரும் நமது கழக இளந்தலைவரும், தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும், நிலையூர் கம்பிக்குடி கால்வாய்த் திட்டம்.

மதுரை மாவட்டம் சோலங்குருணியிலிருந்து ஆணைகுளம் செல்லும் வாய்க்கால் வழியாக மாங்குளம், அரசகுளம், குரண்டி, ராயர்பட்டி வழியாக கம்பிகுடிக்கும், பூலாம்பட்டி, மாங்குளம், உரைகுளம் வழியாக ஆவியூர் கீழக்கண்மாய் வழியாக கம்பிகுடிக்கும், எலியார்பத்தி, நொச்சிபத்தி, பாரபத்தி, ஆவியூர் மேலக் கண்மாய் நிரம்பி, கம்பி குடிக்கும் பின்பு கம்பி குடியிலிருந்து பார்ப்பனம், ˙ரீராம்பூர், அல்லாலப்பேரி வரை அனைத்து கண்மாய்களுக்கும் புதிய வாய்க்கால் வழித்தடம் அமைக்கவும், அதற்குரிய இடங்களை நில ஆர்ஜிதம் செய்வதற்கும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில ஆர்ஜித பணிகள் நடைபெற்று வருகின்றது.

முள்ளிப்பள்ளம்-சோழவந்தான் வழியாக விளாச்சேரி, பெருங்குடி, நிலையூர் கால்வாய் புனரமைப்ப தற்காக சென்ற நிதியாண்டில் 13.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த நிதியின் காரணமாக மழைக்காலங்களில் உபரியாக வரும் மழை நீரினை பெருங்குடி வரை கொண்டு சென்று நிலையூர் கம்பிகுடி கால்வாய்த் திட்டத்தின்கீழ் மதுரை, விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களை சேர்ந்த 95 கண்மாய்கள் பயன்பெறும் வகையில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது.

15.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னம்பட்டி அருகில் அமைந்துள்ள தெற்கு ஓடையில் புதிய அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் நந்திகுண்டு, வையம்பட்டி, தோணுகால், மல்லாங்கிணறு ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் வெள்ள நீரை மேற்கூரிய கண்மாய்களில் நீரினை பெருக்கியதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து பொதுமக்கள் குடிநீர் தேவைக்கும், விவசாயத்திற்கும் பயன்படுத்தியதால் விவசாயம் செழிப்படைந்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேலும், இதே வழித்தடத்தில் விடுப்பட்ட கட்டுமானங்களை மீண்டும் புனரமைக்க ரூபாய் 10.44 கோடி ஒதுக்கி, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருஞ்சிறை கண்மாய், நல்லுகுறிச்சி அணைக்கட்டு, பூம்பிடாரி அணைக்கட்டு புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். இவற்றினால் சென்னம்பட்டி வலதுகால்வாய் பகுதிகள், சென்னம்பட்டி இடதுகால்வாய் பகுதிகள் மற்றும் கம்பிகுடி கால்வாய் திட்டங்கள் மூலம் சுமார் 16,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனவசதி பெற்றுள்ளது. இதற்கான திட்டத்தினை செயல்படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நன்றியினை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தடுப்பணைகள் மற்றும் நீர் தேக்கங்கள்**

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1967-க்கு முன்பு வரை 15 அணைகளும், தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 42 அணைகளும் கட்டப்பட்டுள்ளன.

தலைவர் கலைஞர் அவர்கள், 1967 முதல் 1969 வரை பொதுப் பணித் துறை அமைச்சர் ஆக இருந்தபோது 1976 வரை 20 அணைகள் கட்டப்பட்டன. பின்னர், 1989 ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் 1996 முதல் 2001 வரை, 2006 முதல் 2011 வரை தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் அரசு அமைத்த உடன் கலைஞரால் கட்டி முடிக்கப்பட்ட அணைகள் 22. ஆக மொத்தம் 42 அணைகள். இதுமட்டுமல்லாமல், கரூர், மாயனூர் பகுதியில் காவிரியின் குறுக்கே இருவழிச் சாலையுடன்கூடிய தடுப்பனையும் தமிழ்நாட்டில் உள்ள பல தடுப்பணைகள் தலைவர் கலைஞர் அவர்களால் உருவானவை என்பதை இந்த அவையில் பெருமையாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

விருதுநகர் மாவட்டத்தில் ஆணைகுட்டம் நீர்த்தேக்கம். அர்ஜுனா நதியில் சிற்றாறு, கல்லணை ஆறு, சபரி ஆறு, தலைமலை ஆறு, பேயனாரு, ஆணைத்தலை ஆறு ஆகிய சிற்றாறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து அர்ஜுனா ஆறு உருவாகிறது.

இந்த அணை 1986 இல் கட்டப்பட்டது. இதில் கொள்ளளவு 126 மில்லியன் கன அடி ஆகும். பிளவக்கல் அணை நிரம்பினால் அதன் உபரிநீர் ஆணைக்குட்டம் அணைக்கு வருகிறது. இந்த அணையின்மூலம் விருதுநகர் நகராட்சி, திருத்தங்கல் நகராட்சி, சிவகாசி மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் ஆதாரமாக, 4 இலட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது. மேலும், 3,558 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

இதனையடுத்து ஒரு தடுப்பணை மட்டுமே உள்ளது. உப்பாறும், அர்ஜுனா நதியும் இணையும் இடம் வடமலாபுரம். இந்த இடத்தில் ஒரு தடுப்பணை மற்றும் அர்ஜுனா நதியில் ஆணைக்குட்டம் அணையின் மேற்பகுதியான சிவகாசி வட்டம், பாறைபட்டியில் ஒரு தடுப்பணையும், ஆணைக்குட்டம் அணையின் கீழ்பகுதியான விருதுநகர் மாவட்டம் கோவிந்தநல்லூர், தாதப்பட்டி பகுதிகளில் இரண்டு தடுப்பணைகளும் அமைத்துக் கொடுத்தால் சிவகாசி மாநகராட்சி மற்றும் விருதுநகர் மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும். ஆணைக்குட்டம் அணையின் நீண்டகால பிரச்சினையான ஷட்டர் சரிசெய்யும் பிரச்சினை இருந்து வந்தது. இதனை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு சிறப்பு கவனஈர்ப்பிலும் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்ற காரணத்தினால் அந்தக் கோரிக்கையை ஏற்று ரூ.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றன. அதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவத்துக் கொள்கிறேன்.

அர்ஜுனா நதியின் தெற்கு கரையில் வாடியூர் கண்மாய், கன்னிசேரி கண்மாய், வேப்பிளைபட்டி கண்மாய் என சுமார் 1000 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. மேற்காணும் கண்மாய் ஆயக்கட்டுகளை ஆணைக்குட்டம் நீர்தேக்க ஆயக்கட்டுடன் இணைத்தால் வாடியூர் மற்றும் சின்னவாடி பகுதிகளை சேர்ந்த 19 கிராம விவசாய நிலங்கள் பாசன வசதி பெரும் என்பதனை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் மேற்கூறிய ஆணைக்குட்டம் அணையுடன் பிளவக்கல் அணை, சாஸ்தாகோவில் அணை, குல்லூர்சந்தை அணை, கோல்வார்பட்டி அணை, வெம்பக்கோட்டை அணை, இந்த அணைகளெல்லாம் அனைத்து கால்வாய்களிலும் அதிக அளவு வண்டல் மண் படிந்துள்ளதால் நீர் செல்லும் திறன் வெகுவாகக் குறைந்து உள்ளது. வண்டல்மண் படிவதால் உருவாகும் மணல் தட்டுகள் நீரின் ஓட்டத்திற்கு இடையூறாக உள்ளது. மேற்குறிப்பிட்ட அணைகளின்மூலம் பாசன வசதி பெறும் சுமார் 300-க்கும் மேற்பட்ட கண்மாய்களும் வண்டல்மண் நிறைந்து மண்மேடாக உள்ளது. இதனால் நீரினைத் தேக்க முடியவில்லை. இவை அனைத்தும் கடந்த 50 ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் உள்ளது. இதனால் நீர்த்தேக்கம் மற்றும் செறிவூட்டல் தன்மைக்கு இலாயக்கற்ற நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட நீர்த்தேக்கங்கள், கண்மாய்கள் மற்றும் தடுப்பணைகளைத் தூர்வார சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்றினை செயல்படுத்த கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் 2008 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டு பின்னர், தமிழக முதல்வர் அவர்களால் 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தினை விருதுநகர் மாவட்டம் வைப்பாறு வரை இணைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்திலே புதிய அழகர் அணைத் திட்டம் என்ற ஒரு திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நிரந்நதரமாக நீரோட்டம் பெறும் நதிகளே இல்லை. எனவே, அணையில் நீர்த்தேக்கம் மற்றும் பாசன வசதி சாகுபடி பரப்பளவு இவை அனைத்தும் ஒருமித்த கருத்தோடு கடந்த 50 ஆண்டு காலமாக அழகர் அணை திட்டம் ஆய்வு பணி செய்வது, பின்னர் சாத்தியகூறுகள் இல்லை என்பது தொடர்ச்சியாக உள்ளது.

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர், தாலுகாவில் மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு சரிவில் பேச்சி ஓடை மற்றும் அழகர் ஓடை என இரண்டு ஓடைகள் உருவாகின்றன. இந்த இரண்டு ஓடைகளும் ˙ரீவில்லிபுத்தூர் தாலுகாவில், செண்பகத்தோப்பு அருகே சங்கமிக்கிறது. பின்னர், இந்த நதி பேயனாறு என்று அழைக்கப்படுகிறது. பேயனாற்றின் குறுக்கே அழகர் அணை கட்ட வேண்டும் என இப்பகுதி ஆயக்கட்டுதாரர்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அழகர் அணைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். ஆண்டிப்பட்டி தாலுகா, வாலிப்பாறை கிராமத்தில் மூல வைகையின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும். விருதுநகர் மாவட்டம், ˙ரீவில்லிபுத்தூர், தாலுகாவில் மேற்கு தொடர்ச்சி மலையில் அழகர் கோவில் பள்ளத்தாக்கில் பேயனாற்றின் குறுக்கே அணை கட்டுதல். வைகை ஆற்றின் உபரி நீரை மேற்கு தொடர்ச்சி மலைகள் வழியாக சுரங்கம் அமைத்து அழகர் அணையில் தேக்கி வைத்து, தடுப்பணைக்கு திருப்பி விடுதல். அழகர் அணையிலிருந்து விருதுநகர் மாவட்டத்திற்கு பாசன வசதி மற்றும் குடிநீர் வசதிகளை வழங்குதல்.

பாம்பாறு, அச்சனகோவில் ஆகிய நதிகளை திருப்பி தமிழகத்தில் உள்ள வைப்பாறுடன் இணைக்க தேசிய நீர் மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒரு முன்மொழிவு உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு, பாம்பாறு, அச்சன்கோவில் திட்ட நீரை அழகர் அணை திட்டத்துடன் இணைப்பது குறித்து ஆய்வு செய்யலாம்.

இத்திட்டம் சாத்தியமானால், அழகர் அணைத் திட்டம் போதிய நீரியல் வளத்துடன் விவசாயிகளுக்கு பயனளிக்கும். இவற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில், பாதுகாக்கப்பட்ட காடுகள் மற்றும் சரணாலயங்கள் வருகின்றன. எனவே, தமிழக அரசு சிறப்பு அனுமதி பெற்று, இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்டத்தை செயல்படுத்தினால், விருதுநகர் மாவட்டத்தின் ஒரு பகுதி விவசாயம் சார்ந்த பகுதியாக மாறும் என்பதனை நான் தங்கள் வாயிலாக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, திண்டுக்கல் மாவட்டம், காவல்பட்டி ஊராட்சியில், கடந்த 40 ஆண்டுகளுக்குமேல் அப்பகுதி மக்கள் கேட்டுவரும் பச்சையாறு அணை திட்டத்தை வழங்கி, அப்பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை சமூகப் பார்வையோடு நிறைவேற்றித் தர வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படி அனைத்து வசதிகளும் தமிழகத்திற்கு கொண்டு வர வேண்டும், தமிழக மக்கள் பயன் பெற வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். இதன் அடிப்படையில், குடிசை மாற்று வாரியம் தந்து தமிழகத்தில் குடிசை வீடுகளே இல்லாத நிலையைக் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களின் வழியில் வந்த நமது முதல்வர் அவர்கள் கலைஞர் வீடு வழங்கும் திட்டம், இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் வீடுகள் என தீர்மானித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தில் ஏழை எளியோர்கள் பயன்பெறுகின்றனர். ஆற்று மணல் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, M-SAND, P-SAND வைத்துதான் கட்டுமானம் செய்ய வேண்டி உள்ளது. ஏழை எளியவர்கள் வீடு கட்டுவதற்கு ஏதுவாக, குறைந்த விலையில் மூலப்பொருட்கள் கிடைக்க சுங்கமேல்வரி, கனிம அறக்கட்டளை நிதி, SEIGNIORAGE கட்டணம் இவற்றினை குறைத்தால் இத்திட்ட பயனாளிகள் கலைஞர் வீடு கட்டும் திட்டத்தினை சிறப்புடன் செயல்படுத்துவார்கள் என்பதனை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கனிம வளங்களை எடுத்துச்செல்ல, முதல் முறையாக 17 மாவட்டங்களில் மின்னணு விண்ணப்பம், மின்னணு அனுமதி வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் விருதுநகர் முதன்மையான மாவட்டமாக உள்ளது என்பதனை பெருமிதத்தோடு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மற்றும் ˙ரீவில்லிபுத்தூர் வட்டம், திருவண்ணாமலை பகுதிகளில் நாட்டு செங்கல் சூளைகள் அதிகமாக உள்ளன. அவர்கள் தொழில் செய்வதற்குத் தேவையான மண் அள்ளிக் கொள்ள அரசு அனுமதி இல்லை. இதனால், இத்தொழில் செய்யும் தொழிலாளர்கள் மிகவும் சிரமத்தில் உள்ளனர். இதனால் செங்கல் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மிகவும் சிரமம் அடைகின்றார்கள். செங்கல் தொழில் நலிவடைந்து வருகிறது. இவர்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் வகையிலும், கட்டடப் பணிகள் சிறப்புற நடைபெறவும், பொதுப் பணித் துறை கண்மாய்களில், அரசு அனுமதியுடன் பணம் செலுத்தி, மண் அள்ளி, செங்கல் தொழில் நடத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள், விருதுநகர் மாவட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக திறப்பு விழாவிற்கு வருகைத் தரும்போது, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கௌசிகா ஆற்றின் நீர்ப்பிடிப்பு வடிகால்களை புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கஞ்சம்பட்டி கண்மாய் மற்றும் பிற நீர்வளத் துறை கண்மாய்கள், விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்தூர், சிவகாசி மற்றும் வெம்பக்கோட்டை தாலுக்காவில் உள்ள கண்மாய்களை சீரமைப்பதற்காக ரூ.41 கோடி வழங்கினார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய விருதுநகர் தொகுதியின் ஒரு சில கோரிக்கைகளைப் படிக்கிறேன். விருதுநகர் பாதாள சாக்கடை திட்டம் ஆரம்பித்து, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பணி முடிந்ததாக அந்நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் குழாய் பதித்து, தொட்டி கட்டி, சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஆனால், கழவுநீர் மட்டும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேரவில்லை. ஏனென்றால், கழிவுநீர் திறந்தவெளி கால்வாய்களில்தான் செல்கிறது. இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் கழிவுநீர், வீட்டு இணைப்புகள் அனைத்தும் முழுமையாக திறந்தவெளியில்தான் செல்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் வெற்றிகரமாக மக்களுக்குப் பயன்பட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், M.புதுப்பட்டி ஊராட்சியில், சொக்கலிங்காபுரம் எனும் கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் முழுமையாக ஆதிதிராவிடர் சமுதாயம் வாழ்கிற பகுதி. அந்தக் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப பள்ளி கொடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், விருதுநகரில் குடிநீர் பற்றாக்குறையை போக்க தமிழக முதலமைச்சர் அவர்களால் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம்-II கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் பணிகள் முழுமையாக முடிந்து, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக அமைச்சர் பெருமக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் மூலமாக நாளொன்றுக்கு 90 இலட்சம் லிட்டர் தண்ணீர் வர வேண்டும். ஆனால், இன்றையதினம் 90 இலட்சம் லிட்டர் நீரை பெறுவதற்கு 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மட்டுமே கட்டப்பட்டுள்ளது. இதனால், இத்திட்டத்தில் வழங்கப்படும் நீரினை முழுவதுமாக பெறமுடியாத சூழல் உள்ளது. ஆதலால், தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் வழங்கப்படும் முழு அளவு, 90 இலட்சம் லிட்டர் தண்ணீரை தேக்கி, பொதுமக்களுக்கு விநியோகிக்கும் வகையில் புதியதாக 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ஆவன செய்ய வேண்டும். இதற்கான நிதி ஆதாரம் திட்ட செலவினத்திலே உள்ளது. புதிய நிதி தேவை இல்லை. ஆகவே, விரைந்து பணி செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் தொகுதியில் சுமார் 300 பட்டாசு ஆலைகள் உள்ளன. இதில் தினமும் 50,000 தொழிலாளர்கள் பணிசெய்கின்றார்கள். இதில் திடீரென ஏதேனும் தீ விபத்துகள் ஏற்பட்டால் பட்டாசு ஆலையிலிருந்து, பிரதான சாலைக்கு வந்துதான் மருத்துவமனைக்கு செல்லமுடியும். இவை கடந்த பத்தாண்டுகளாக சீர் செய்யப்படாமல் உள்ளது. இதில் AMBULANCE மற்றும் இதர வாகனங்கள் செல்லமுடியாத சூழ்நிலை உள்ளது. இதனால் உயிர்பலி அதிகரிக்கிறது. கடந்த 2011-ல் பட்டாசு தொழிற்சாலை விபத்து நடந்தபோது அணுகுசாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததால், பிரதான சாலையை சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டு உயிர்பலி அதிகரித்தது. இதனை கருத்தில்கொண்டு அப்போதைய ஆட்சியாளர்கள் பட்டாசு தொழிற்சாலைகள் அனைத்திற்கும் அணுகுசாலைகளை, தார்சாலைகளாக மாற்றினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலைகளை சீரமைக்கலாம் என வழி உள்ள நிலையில், கடந்த 14 ஆண்டுகளாக இச்சாலை சீரமைக்கவில்லை. (மணியடிக்கப் பெற்றது) (குறுக்கீடு)

பட்டாசு ஆலையில் இருந்து பிரதான சாலைக்கு செல்லும் அனைத்து சாலைகளையும் கலைஞர் கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் சீர்செய்து, புதிய சாலையாக மாற்றம் செய்ய ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மீதமுள்ள என்னுடைய தொகுதி கோரிக்கைகளை நான் அவையில் படித்ததாக பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**தொகுதி கோரிக்கைகள்:**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி யூனியன், எரிச்சநத்தம் பேருந்து நிலையத்தில் புதிய நவீன சுகாதார வளாகம் அமைக்க வேண்டும்.

விருதுநகர், அருப்புக்கோட்டை-அல்லம்பட்டி முக்குரோடு முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வரை உள்ள தார் சாலையை அகலப்படுத்தி கொடுக்க வேண்டும்.

விருதுநகர் NH7-ல் இருந்து நகருக்கு உள்ளே செல்லும் கலைஞர் நகர் பகுதியில் போலீஸ் பாலம் என்ற கீழ்மட்ட பாலம் உள்ளது. கௌசிகா ஆற்றில் வெள்ளப்பெருக்கு மற்றும் மழைக்காலங்களில் நகருக்குள் செல்வதில் பொதுமக்கள் சிரமம் அடைவதால், மேல்மட்ட பாலம் அமைத்து கொடுக்க வேண்டும்.

கௌசிகா நதியின் இருகரைகளிலும் நான்கு வழி சாலை, கலைஞர் நகர் முதல் அல்லம்பட்டி வரை தார் சாலை அமைத்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைய்நல்லூர் பேரூர் பள்ளி வாசலில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். ம.ஜெயச்சந்திரன், பி.வி.ஆர். விசுவநாதன், ஜெ.ஜெயபால், கு.ஓம்சிவசக்திவேல், கணேசன், பக்தவச்சலம், அஞ்சுகம் கணேசன், ஜோதி, விஜயபாபு, சரவணகுமார், வீர.சுரேஷ்பாபு, செல்வம், ப.அன்பரசு, கிருஷ்ணராஜ், நாசர், சுரேஷ், சதாம், சுலைமான், இனயத்துல்லா, கவுன்சிலர் டி.கே.எஸ். செந்தில், ஷாஜகான், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

சத்துணவு - அங்கன்வாடி மையங்களில்

# ஒரு மாதத்துக்குள் புதிய பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்!

## சட்டப் பேரவையில் — அமைச்சர் பி.கீதாஜீவன் உறுதி!



*சென்னை, மார்ச் 27- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது விடையளித்த சமூக நலத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன, "காலியாக உள்ள சத்துணவு - அங்கன்வாடி பணியிடங்கள் ஒரு மாதத்துக்குள் நிரப்பப்படும்" என உறுதியளித்தார்.*

*கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:*

**மு. பாபு:** *செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலத்தூர், சித்தாமூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் 21 ஊராட்சிகளையும் சேர்த்து மொத்தம் 333 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் சொந்தக் கட்டடத்தில் 233 மையங்களும் பிற இ-சேவை மையம், நூலகம் பிற அரசுக் கட்டடங்களில் 89 மையங்களும் வாடகைக் கட்டடங்களில் 31 மையங்களும் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடங்கள் மையங்கள் 120 மையங்கள் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. அதற்கு கட்டடங்களைக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன்:** *நிச்சயமாக அரசு அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும். சட்டமன்ற உறுப்பினர்கூட ஒரு முன்னுரிமை பட்டியல் எதை முன்பு செய்யவேண்டும் எதை பின்பு செய்ய வேண்டும் என்பதுபோன்ற பட்டியல் கொடுத்தீர்களென்றால், அதன் அடிப்படையில் ஆவன செய்யப் படும்.*

**மு. பாபு:** *அமைச்சர் அவர்களுக்கு நன்றி, அதே போன்று, 333 மையங்களில் பணியாளர்கள் 46 பணியாளர்கள், பிற பணியாளர்கள் இல்லை. உதவியாளர்கள் 51 உதவியாளர்கள் இல்லை மொத்தம் 97 பணியாளர்கள் இல்லாமல் ஒரு பணியாளர் வந்து இரண்டு, மூன்று மையங்களை கவனிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** *தற்போது அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர், அங்கன்வாடி உதவி யாளர் பணியிடம் எடுப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் உத்தரவிட்டு அரசாணை கடந்த வாரம் பிறப்பிக்கப்பட் டுள்ளது என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். அது போன்று நம்முடைய அவர் சொல்கின்ற அந்தத் திட்டம் வந்து ஒரு Pilot scheme ஆக செயல்பட்டு வருகிறது. அதை அரசு பரிசீலித்து தொடர்ந்து செயல்படுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.*

**ஜி.கே. மணி:** *ஊதிய உயர்வு வழங்குவது, பணி நிரந்தரம் போன்ற அவருடைய கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப் படுமா? சத்துணவு மையங்களிலே பணியாற்றக்கூடிய இடங்கள் மிகவும் காலியாக உள்ளது. அங்கேயும் இந்தப் பணிச்சுமை இருக்கிறது. இதையெல்லாம் நிறைவேற்றப் படுமா என்பதை அவர்களுக்குப் பதவி உயர்வு, பணி நிரந்தரம் இவை எல்லாம் நிறை வேற்றப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் பி.கீதா ஜீவன்:** *7,900 அங்கன்வாடி குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் புதிய பணியாளர்கள் எடுப்பதற்கு அரசாணைபிறப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 8,997 சத்துணவுத் துறையில் உள்ள சத்துணவு சமையலர்களை எடுப்பதற்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஒரு மாதத்திற்குள்ளாக புதிய பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.*

*அதேபோன்று, நீங்கள் கூறுவதுபோன்று அவருடைய கோரிக்கைகள் அரசு அவரிடம் அந்த சங்கத்தினரிடம் தொடர்ச்சியாகப் பேசி வருகிறது. பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது மற்ற கோரிக்கைகளைப் பொறுத்தவரைக் கும் அரசு பரிசீலித்து வருகிறது.*

*இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.*

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார்நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## செஞ்சியில் நடைபெறுகிறது! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*செஞ்சி, மார்ச் 27- விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார்நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சியில் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு இஃப்தார் நோன்பினைதிறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.*

*விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புனித ரமலான் சமூகநல்லிணக்க இஃப்த்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி இன்று (27.3.25) மாலை 4.30 மணி முதல் 6.30 மணிவரை செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத்அப்துல் மஜித் பாபுதலைமை தாங்குகிறார். மயிலம்சிவஞான பாலயசுவாமிகள் பொம்புர ஆதீனம், செஞ்சி புனிதமிக்கேல் ஆலயத்தின் பங்கு தந்தைஅந்தோணி ராஜ்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர்முன்னிலை வகிக்கின்றனர் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்கிறார்.முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.*

*விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புனித ரமலான் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.*

*இதில் ம.தி.மு.க. மாநில துணை பொது செயலாளர் ஏ.கே. மணி,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில துணைச் செயலாளர் ரங்க பூபதி,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், செஞ்சி வட்டார செயலாளர் ஆல்பர்ட் வேளாங்கண்ணி, மாவட்ட விவசாய இயக்க துணை தலைவர் மாதவன்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் தனஞ்செழியன், கம்யூனிஸ்ட் கோவிந்தராஜ், செஞ்சி நகைக்கடை சங்கத் தலைவர் ஆதில் பாஷா, வர்தகர் சங்கத் தலைவர் செல்வராஜ், வணிகர் சங்க தலைவர்ரப்பானி ஆதம், சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் சங்கர், துணைத் தலைவர் சுரேஷ், முன்னாள் ரோட்டரி கிளப் சங்கத் தலைவர் பாஸ்கர்,நுகர் பொருள் விநியோகஸ்தர்கள் சங்க தலைவர் தேவராஜ் மணிகண்டன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம்நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள்மரக்காணம் ரவிக்குமார் ,அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனிராஜ், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ் சேரிகணேசன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், கதிரேசன், வீடுர் ரவி, எம் பாலகிருஷ்ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராம், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், நாராயண மூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், நகர பேரூர் தலைவர்கள், ஒன்றிய துணை பெரும் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள், அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறுகிறார்.*